# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

19- A, Rukmini Lakshmipathy Salai, (Marshal Road),
Egmore, Chennai – 600 008.
Phone : ++91-044-2841 1376 / 2841 1378/ 2841 1379 Fax : ++91-044-2841 1377
Email : tnercmail@gmail.com Web site : www. tneo.gov.in

**முன்னிலை: திரு.ஆ.தர்மராஜ், மின்குறை தீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண் 28/2015**

திரு. R. பாலராமமூர்த்தி,
ப.எண். 14, புது எண்.31, வெங்குபிள்ளை தெரு,
எழும்பூர், சென்னை – 600 08. ........மேல் முறையீட்டாளர்
(திரு. R. தட்சிணாமூர்த்தி)

எதிர்

மேற்பார்வை பொறியாளர்,
சென்னை மின்பகிர்மான வட்டம்/மையம்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
33/11, கே.வி.வள்ளுவர் கோட்டம் துணை மின் நிலையம்,
எம்.ஜி.ஆர் சாலை,
நுங்கம்பாக்கம், சென்னை – 34. ......... எதிர்மனுதாரர்
(திரு.R.T. அரங்கேஸ்வரன், உதவி செயற்பொறியாளர்/எழும்பூர்)

**கேட்புரை நாள்: 16–6–2015**

**ஆணை நாள் : 21–7–2015**

திரு. R. பாலராமமூர்த்தி, எழும்பூர், சென்னை – 8 அவர்களின், 14–3–2015 நாளிட்ட மனு மேல் முறையீட்டு மனு எண். 28/2015 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது 21–5–2015 அன்று மின் குறைதீர்ப்பாளர் முன்பு கேட்புரை நடத்தப்பட்டது. மேல் முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர் மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள், கேட்புரையின் பொழுது இருதரப்பினராலும் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின் குறைதீர்ப்பாளரால் கீழ் கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

## ஆணை

## 1. மேல்முறையீட்டாளரின் கோரிக்கை :

அவருடைய மனுவை பரிசீலித்து மின் இணைப்பு clause 27 (4) Tamil Nadu Distribution Code ன் படியோ அல்லது தவறு நடக்கும் என்று எதிர்பாராமல், எழுதாத பேப்பரில் கையெழுத்திட்ட அவரது தவறை as a special case ஆக மன்னித்து மீண்டும் மின் இணைப்பு வழங்க உத்தரவு வழங்க வேண்டும் என்று கோரியுள்ளார்.

## 2. வழக்கின் சுருக்கம்:

2.1 மேல்முறையீட்டாளர் திரு R. பலராமமூர்த்தி அவர்களின் பெயரில் மின் இணைப்பு எண் 142–023–23, 14, வெங்குபிள்ளை தெரு, எழும்பூர் என்ற விலாசத்தில் இருந்து அந்த மின் இணைப்பு எண், மனுதாரரின் வேண்டுகோளின் பெயரில் 13–2–2013 அன்று நிரந்தர மின் துண்டிப்பு செய்யப்பட்டு, 11–3–2015ல் அதன் கணக்கும் முடிக்கப்பட்டு விட்டது.

2.2 அந்த இடத்தின் உரிமையாளர், மேல் முறையீட்டாளரிடம், வெற்று தாளில் கையெழுத்து வாங்கி, அந்த கடிதத்தை மின் வாரியத்தில் சமர்பித்து மின் துண்டிப்பு செய்து விட்டார். எனவே, அவருக்கு அந்த இடத்தின் குடியிருப்பவர் என்பதினால் புதிய மின் இணைப்பு தர வேண்டும் என்று மேல்முறையீட்டாளர் கோரியுள்ளார். ஆனால் மின் இணைப்பு வழங்கப்படவில்லை.

2.3 20–1–2015 அன்று மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்திற்கு மனு செய்துள்ளார். மன்றம், அவருக்கு நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளதாலும், உரிமையாளரின் ஆட்சேபனை உள்ளதாலும் நீதிமன்ற உத்தரவு பெற்று வரும் வரை காத்திருக்க வேண்டும் அல்லது மின் இணைப்பு வழங்க நீதிமன்ற உத்தரவு அளித்தால் மின்னிணைப்பு வழங்கப்படும் என்று அறிவித்துள்ளது.

2.3 மேற்கண்ட தீர்வில் திருப்தியில்லாததால் மேல்முறையீட்டாளர் இந்த மேல்முறையீட்டு மனுவை சமர்பித்துள்ளார்.

3. <u>மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள்</u>

3.1 அவர் தந்தையார் T. ராஜி நாய்க்கர் அவர்கள் சுமார் 40 ஆண்டு காலத்திற்கும் மேலாக நடத்தி வந்த ப.எண். 14, புது எண். 31, வெங்கு பிள்ளை தெரு, எழும்பூர், சென்னை–8 என்ற விலாசத்தில் இருந்த வெற்றிலை பாக்கு, குளிர்பான கடையை, அவரின் தந்தைக்கு பின்பு அவர் தொடர்ந்து அதே கடையை 40 ஆண்டு காலமாக மின் இணைப்பு (எண்.142–23–23) அவரின் பெயரில் பெற்று வியாபாரம் செய்து வருகின்றார்.

3.2 இந்த நிலையில் தற்போது வீட்டின் உரிமையாளர் திருமதி D. சாரதா அவர்கள் இக்கட்டிடத்தை இடித்து விட்டு புதுக்கட்டிடம் கட்டப் போவதாகவும் அவருக்கும் அவருடைய பக்கத்திலுள்ள துணிக்கடை திரு.சுந்தர்ராஜனுக்கும், அடுத்த தையற்கடை திரு. தாமோதரனுக்கும் சிறிய கடை வெங்கு பிள்ளை சந்து தெருவை பார்த்தது போல் கட்டித் தருகின்றேன் எனறு கூறி ரூ.20/– Non Judicial paperல் எழுதி கையெழுத்து போட்டு 8.2.2013 அன்று கொடுத்தார். பின்னர் அவர் நடத்தி வந்த கடையின் தெற்கே 5 அடி அகலம் 10 அடி நீளம் இடத்தையும் புதுக் கட்டிடம் கட்ட உடனே தேவையாக உள்ளது என்று கேட்டு அவரின் அனுமதியுடன் இடித்து எடுத்துக் கொண்டார்.

3.3 தொடர்ந்து 12.2.2013 அன்று புதுக் கட்டிடம் கட்ட பழைய மின் மீட்டர்கள் உள்ள இடம் தடையாக உள்ளது அதனால் அதை மாற்றி வேறு இடத்தில் வைக்க மின்துறைக்கு மனு கொடுக்க வேண்டும், அதற்கு எவ்வாறு எழுத வேண்டும் அதை மின் துறையில் கேட்டு எழுதிக் கொள்கிறேன், நீங்கள் மூவரும் வெற்றுத் தாளில் கையெழுத்து மட்டும் போட்டு கொடுங்கள் நாங்கள் அதை பூர்த்தி செய்து கொள்கிறோம் என்று நயமாக பேசினார். வீட்டு உரிமையாளரை பகைத்து கொள்ள முடியாது என்பதால் அவர் கேட்டதை போல அவர்கள் மூவரும் வெற்றுத் தாளில் (எதுவும் எழுதாத பேப்பரில்) கையெழுத்து போட்டு கூட்டு உரிமையாளரிடம் கொடுத்தார்கள். அதை அவர் தனக்கு சாதகமாக பயன்படுத்தி மின் இணைப்பை ஒப்படைப்பதாக எழுதி மின் துறையிடம் கொடுத்து அவர்களது மின் இணைப்பை துண்டிக்க செய்து விட்டார்.

3.4 உதவி மின் பொறியாளரிடம் புகார் கொடுத்து திரும்ப மின் இணைப்பு வழங்குமாறு பணிவுடன் கேட்டோம். அவர் இருப்பிடத்திற்கு ஆதாரம் கொடுங்கள் என்றார். வாடகை ரசீது தருவதில்லை. என்ன ஆதாரம் வேண்டும் என்று தெளிவாக கூறுமாறு பலமுறை அவரிடம் கேட்டோம். பல மாதங்கள் எங்களை வரவழைத்து சரியான பதில் கடைசி வரை கூறவில்லை.

3.5 பின்னர் மின்துறை செயற்பொறியாளருக்கு 20.11.2014 அன்று Clause 27(4) Tamilnadu Distribution Codeன்படி மின் இணைப்பு வழங்க மனு கொடுத்தார் அதில் அவர் கேட்பது போல Indemnity Bondம் கொடுப்பதாக எழுதியிருந்தார்.

3.6 அவரின் தந்தையார் காலத்தில் 1957ம் ஆண்டு வழங்கிய வாடகை ரசீதையும், வீட்டு உரிமையாளர் எழுதி கொடுத்த ஒப்பந்த நகலையும், வீட்டு உரிமையாளர் அவர் வாடகைதாரர் என்று குறிப்பிட்டிருந்த 12.6.2013 கடிதத்தையும், கடை முகவரியில் உள்ள அவரது வங்கி பாஸ் புத்தக நகலையும், கடைக்கு வாங்கிய பொருட்களின் ரசீது நகலையும் ஆதாரமாக சமர்ப்பித்தார், பின்னர் 20.1.15 அன்று (TANGEDCO) Consumer Grievance Redressal Forum, Chennai-34 முன்னர் Chairman/CGRF/ விசாரணை மேற்கொண்டார்.

3.7 விசாரணையில், பக்கத்து துணிக்கடைக்காரர் திரு.சுந்தர்ராஜ் சுமார் ரூ.30000/– செலவு செய்து நீதிமன்றத்தின் உத்திரவு பெற்று மின் இணைப்பு மேற்படி சட்டத்தின் அடிப்படையில் பெற்றுள்ளார். அவரைப் போல செலவு செய்ய முடியாத ஏழை அவர் என்று கூறினார். புது மின் கேபிள், மீட்டர் இவற்றிற்கு பணம் செலுத்த முடியுமா என்று கேட்கப்பட்டது. அவர் பணம் செலுத்துகின்றேன் Indemnity Bondல் எழுதி தருகின்றேன் என்றும் தெரிவித்தார்.

3.8 ஆனால் தீர்ப்பில் மின் இணைப்பை அவராகவே திருப்பி ஒப்படைத்திருப்பதாகவும், வீட்டு உரிமையாளர் அவர் விருப்பம்போல் தன்னிச்சையாக ஒப்படைத்திருப்பதை நிரூபிக்க ஆதாரம் இல்லை என்றும், அவர் தந்தையார் பெயரில் 1956ம் ஆண்டு வழங்கிய வாடகை ரசீதில் எண்.16, வெங்குபிள்ளை தெரு என்று இருப்பதாகவும், வீட்டு உரிமையாளர் அவர் பெயருக்கு மின் இணைப்பு கொடுக்கக் கூடாது என்று தடை மனு கொடுத்துள்ளதாகவும், நீதிமன்றத்தில்

வழக்கு நிலுவையில் உள்ளதாக மின் பொறியாளர் (Licencee) சொல்லியுள்ளதாலும், நீதிமன்ற தீர்ப்பு வரும் வரை காத்திருக்கும்படியும் அல்லது நீதிமன்ற உத்திரவு புதியதாக மின் இணைப்பு வழங்க பெற்றுத் தரும்படியும் தீர்ப்பளித்துள்ளார்கள்.

3.9 1956ம் ஆண்டு அவரின் தந்தையார் T.ராஜி நாய்க்கர் பெயரில் வாடகை ரசீது கொடுத்தது தற்போதைய உரிமையாளர் திருமதி D. சாரதாவின் கொள்ளு பாட்டிதான். அவர் பெயர் மங்கத்தாய் அம்மாள். அப்பொழுது அந்த கடையுடன் சேர்ந்த வீட்டுக்கு எண்.16, வெங்கு பிள்ளை தெரு, எழும்பூர் இதற்கு பின் யாரும் வாடகை ரசீதை கொடுக்கும் வழக்கத்தை பின்பற்றவில்லை அன்று 1956ல் 16, வெங்கு பிள்ளை தெரு என்பதுதான் இன்று ப.எண்.14, பு.எண்.31, வெங்கு பிள்ளை தெரு என்றுள்ளது இதில் எந்தவிதமான தவறும் இல்லை.

3.10 வீட்டு உரிமையாளர் திருமதி D. சாரதா மேல்முறையீட்டாளரின் பெயருக்கு மின் இணைப்பு வழங்கக்கூடாது என்று நீதிமன்றத்தில் எந்தவிதமான தடை உத்தரவும் பெற்று மின் துறையிடம் சமர்ப்பிக்கவில்லை. மேலும் உரிமையாளர் நீதிமன்றத்தில் அவர் கடையை காலி செய்ய சொல்லி இதுவரை எந்த வழக்கும் தொடுக்கவில்லை. இது குறித்து மேலும் சட்டத்திற்குட்பட்டு எந்த நோட்டீசும் இதுவரை தரவில்லை. பில்டிங் புரோமோட்டர் அவர் கடையின் பின் பகுதியில் இருந்த வீட்டின் பகுதியை இடிக்கும்போது அவருக்கு பணபலமும், அரசியல் பலமும் உள்ளது, இரவோடு இரவாக அவரே கடையை இடித்து விட்டு தானாக விழுந்து விட்டது என்று சொல்லிவிடுவேன் என்று மிரட்டினார். இது குறித்து காவல் துறையிடம் புகார் கொடுத்தேன். மேலும் இக்கடை ஒன்றே அவர் குடும்பம் உயிர் வாழ சோறு போடுவதால், அவரது கடை பகுதியை சட்ட விதிக்கு முரண்பாடாக இடிக்கக் கூடாது என்று தடை உத்திரவுக்கு மனு செய்து தடை உத்தரவு பெற்றுள்ளார். அந்த வழக்கு தான் நிலுவையில் உள்ளது.

3.11 எனவே தயையுள்ளத்தோடு கருணை கூர்ந்து அவரது மனுவை பரிசீலித்து மின் இணைப்பு Clause 27(4) Tamilnadu Distribution Codeன் படியோ அல்லது தவறு நடக்கும்

என்று எதிர்பாராமல் எழுதாத பேப்பரில் கையெழுத்திட்ட அவரின் தவறை as a special case ஆக மன்னித்து மீண்டும் இம்மின் இணைப்பு வழங்க உத்தரவு கோரியுள்ளார்.

4. <u>எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள்</u>

4.1 பழைய எண் 14, புதிய எண் 31, வெங்கு பிள்ளை தெரு, எழும்பூரில் வசிக்கும் திரு. R. பலராமமூர்த்தி அவர்களின் 12.2.2013 நாளிட்ட கடிதத்தில் தன்னுடைய மின் இணைப்பு எண்.143–023–23 திரும்ப ஒப்படைக்கிறேன் என்று தெரிவித்ததால் அதற்கான கட்டணங்கள் வசூலிக்கப்பட்டு மின் அளவி மின் இணைப்பிலிருந்து அகற்றப்பட்டது அது போலவே, மின் இணைப்பு எண்.142–023–20 மற்றும் 142–023–21 ஆகிய மின் இணைப்புகளும் துண்டிக்கப்பட்டு, மின் அளவிகள் அகற்றப்பட்டன.

4.2 திரு. R. பலராமமூர்த்தி அவர்களும் மற்றைய இருவரும், அவர்கள் அந்த இடத்தின் வாடகை தாரர்கள் என்றும், இடத்தின் உரிமையாளர் அவர்களை ஏமாற்றி அவர்களுடைய மின் இணைப்புகளை (Surrender) ஒப்படைக்க வைத்துவிட்டார்கள் என்றும் எனவே, துண்டிக்கப்பட்ட மின் இணைப்புகளை திரும்ப வழங்க வேண்டும் என்று 8–4–2013 நாளிட்ட மனுவில் முறையீடு செய்திருந்தார். இதற்கிடையில் திருமதி சாரதா என்பவர் தான் அந்த இடத்தின் உரிமையாளர் என்றும் அங்கு புதியதாக கட்டிடங்கள் கட்ட இருப்பதால், மின் இணைப்பு கோரும் விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ள வேண்டாம் என்று தன்னுடைய ஆட்சேபனையை 20–4–2013 நாளிட்ட மனுவில் தெரிவித்துள்ளார்.

4.3 இந்த சூழ்நிலையில், திரு. R. பலராமமூர்த்தி அவர்கள் பழைய எண். 14, புதிய எண்.31, வெங்கு பிள்ளை தெரு, எழும்பூரிலுள்ள கடைக்கு புதிய மின் இணைப்பு தர வேண்டும் என்று மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்திற்கு மனு செய்துள்ளார். அம்மனுவில் அந்த பெட்டிக் கடை 40 வருடக் காலமாக அங்கு இயங்கி வருகிறது என்றும், வாடகை அவர்களால் ஒழுங்காக செலுத்தப்படுகிறது என்றும் தெரிவித்துள்ளார். அவருடைய தகப்பனார் பெயரிலுள்ள வாடகை ரசீது, வங்கி கணக்கு புத்தகம், வியாபார பில்கள் மற்றும் பழைய மின்சார கட்டண அட்டை

ஆகியவற்றை சமர்பித்து, மின் இணைப்பு, கட்டிட உரிமையாளரால் வேண்டும் என்று திரும்பி கொடுக்கப்பட்டுவிட்டது என்று தெரிவித்துள்ளார்.

4.4 திரு பலராமமூர்த்தி அவர்கள் சமர்பித்துள்ள ஆவணங்களை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, அவர் அந்த பெட்டிக் கடையை நீண்ட காலமாக வைத்துள்ளார் என்பதுவும், அவரின் பெயரில் மின் இணைப்பு அந்த பெட்டிக் கடைக்கு இருந்தது என்றும் ஆனால் அவரால்தான் அந்த மின்இணைப்பு வேண்டாம் என்று மின் வாரியத்திற்கு தெரியப்படுத்தியுள்ளார் என்றும் தெரிகிறது.

4.5 மேலும், அவர் இணைத்துள்ள வாடகை ரசீது, கதவு எண்.16, வெங்குபிள்ளை தெரு, எழும்பூர் என்ற விலாசத்திலுள்ள இடத்திற்கு 1956ஆம் ஆண்டு, அவருடைய தகப்பனார் ராஜு நாயக்கர் பெயரில் உள்ளது ஆனால் அவர் மின் இணைப்பு கோரும் இடம் கதவு எண்.14, வெங்குபிள்ளை தெரு, எழும்பூர், சென்னை –8ல் உள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

## 5. <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை</u>

5.1 மேல்முறையீட்டாளரும், எதிர்மனுதாரரும், தங்களது தரப்பு வாதத்தை எடுத்துரைப்பதற்கு வசதியாக 21–5–2015 அன்று கேட்புரை மின்குறைதீர்ப்பாளர் முன்பாக நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது. ஆனால் மேல் முறையீட்டாளர் 21–5–2015 அன்று கேட்புரையில் கலந்து கொள்ளவில்லை.

5.2 மேல்முறையீட்டாளர், தனக்கு உடல் நலம் சரியில்லை என்பதால் வேறு நாளில் கேட்புரை நடத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டதற்கு இணங்க, 16–6–2015 அன்று கேட்புரை நடத்தப்பட்டது.

5.3 மேல்முறையீட்டாளர் சார்பில், அவரது அண்ணன் திரு. R. தட்சிணாமூர்த்தி அவர்கள் கலந்து கொண்டு மேல்முறையீட்டாளர் சார்பில் வாதங்களை எடுத்துரைத்தார்.

5.4 திரு R.T. அரங்கேஸ்வரன், உதவி செயற் பொறியாளர், எழும்பூர் அவர்கள் எதிர்மனுதாரரது சார்பில் இரண்டு நாட்களிலும் கலந்து கொண்டு, தன்னுடைய தரப்பு வாதத்தை எடுத்துரைத்தார்.

**6. <u>மேல்முறையீட்டாளரின் பிரதிநிதி கேட்புரையின் பொழுது எடுத்துரைத்த வாதங்கள்</u>**

**6.1** திரு. R. தட்சிணாமூர்த்தி அவர்கள் கேட்புரையில் கலந்து கொண்டு, மேல் முறையீட்டாளரது சார்பில் வாதங்களை எடுத்துரைத்தார். அவர் மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்களை மீண்டும் வலியுறுத்தினார்.

**6.2** மேல்முறையீட்டாளரின் பிரதிநிதி, மேல்முறையீட்டாளரின் பெயரிலுள்ள மின் இணைப்பை நிரந்தரமாக துண்டிக்க வேண்டும் என்று மனு கொடுக்கவில்லை என்றும் கட்டிடத்தின் சொந்தக்காரர், மேல்முறையீட்டாளரிடம் வெற்றுக் காகிதத்தில் கையொப்பம் பெற்று, மின் துண்டிப்பிற்கு ஏற்பாடு செய்துவிட்டார் என்று தெரிவித்தார்.

**6.3** மேலும் மேற்கண்ட மின் இணைப்பினை துண்டித்து மின் அளவியை அகற்றியது மேல்முறையீட்டாளருக்கு தெரியாது என்றும் தெரிவித்தார்.

**6.4** மேல்முறையீட்டாளரின் பெயரிலிருந்த மின் இணைப்பை அவருக்கு மீண்டும் வழங்க வேண்டும் என்று கோரினார்.

**6.5** மேல் முறையீட்டாளர் தற்பொழுது வைத்துள்ள பெட்டிக் கடைக்குதான், அவரின் தகப்பனார் பெயரில் ரசீது வழங்கப்பட்டுள்ளது என்றும் அந்த ரசீதில் உள்ள கடைதான் அவருடைய பெட்டிக் கடை என்றும், ரசீதிற்கும், கடை உள்ள முகவரியில் உள்ள எண் வேறுபட்டிருந்தாலும், இடம் ஒன்றுதான் என்றும் வாதிட்டார். மேலும், மேல்முறையீட்டாளர், அந்த இடத்தின் வாடகைதாரர் என்பது இடத்தின் உரிமையாளராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட விஷயம் ஆகும். எனவே, அவரை வாடகைதாரர் என்ற நிலையில் தமிழ்நாடு மின்சார வழங்கல் விதித் தொகுப்பின் விதி 27(4) ன்படி அவருடைய பெட்டிக் கடைக்கு மின்சாரம் வழங்க வேண்டும் என்றும் வாதிட்டார்.

**7.0 <u>எதிர்மனுதாரரின் பிரதிநிதி கேட்புரையின் பொழுது எடுத்துரைத்த வாதங்கள்:</u>**

**7.1** திரு. R.T. அரங்கேஸ்வரன், உதவி செயற் பொறியாளர் / எழும்பூர் அவர்கள் கலந்து கொண்டு தன்னுடைய தரப்பு வாதத்தை எடுத்துரைத்தார்.

7.2 திரு. R. பாலராமமூர்த்தி அவர்களால், மின் இணைப்பு, வேண்டாம் என்று எழுதி கொடுக்கப்பட்ட மனுவின் பேரில்தான் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டு, மின் அளவியும் அகற்றப்பட்டுவிட்டது என்றும், மின் இணைப்பு நுகர்வோரின் விருப்பத்தின்படி துண்டிக்கப்பட்டது என்பதால் மீண்டும் அந்த மின் இணைப்பிற்கு மறு இணைப்பு வழங்க முடியாது என்று வாதிட்டார்.

7.3 மேலும், புதியதாக மின் இணைப்பு வழங்க வேண்டும் எனில் மேல்முறையீட்டாளர், மின்சார பகிர்மான விதி 27(4)ல் குறிப்பிட்டுள்ளபடி, அந்த கட்டிடத்தின் சொந்தக்காரரின் சம்மத கடிதம் அல்லது சமீபத்திய வாடகை இரசீது அல்லது, குத்தகை ஒப்பாவணம் அல்லது நீதி மன்ற உத்தரவு போன்றவைகளை சமர்பிக்க வேண்டும். ஆனால், மேல்முறையீட்டாளர் சமர்பித்துள்ள வாடகை ரசீது 1956 வருடத்திற்கு உள்ளது. மேலும் அந்த ரசீது, மேல்முறையீட்டாளரின் தகப்பனார் திரு. ராஜி நாயக்கர் என்ற பெயரிலுள்ளது என்றும், ரசீதில் உள்ள விலாசமும், பெட்டிக் கடை தற்பொழுதுள்ள விலாசமும் மாறுபட்டுள்ளது என்றும் வாதிட்டு எனவே, மின் இணைப்பு வழங்க முடியாது என்று தெரிவித்தார். மேலும், மற்றுமொரு வாடகைதாரரான திரு. தாமோதரன் அவர்களின் OS NO. 2565 of 2013 என்ற வழக்கு நிலுவையிலுள்ளது என்றும் தெரிவித்தார்.

## 8. <u>மின்குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>

8.1 மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள், இருதரப்பினராலும், கேட்புரையின் பொழுது எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து பார்க்கும் பொழுது கீழ் கண்டவைகள் வழக்கெழு வினாக்களாக உள்ளன

(1) மேல்முறையீட்டாளரின் வாதமான, துண்டிக்கப்பட்ட அவரது பெயரிலுள்ள மின் இணைப்பை மீண்டும் வழங்க வேண்டும் என்பது ஏற்புடையதா?

(2) மேல்முறையீட்டாளரின் பெட்டிக் கடைக்கு புதிய மின் இணைப்பு அவர் அந்த இடத்தின் வாடகைதாரர் என்பதால் மின்சார வழங்கல் விதித் தொகுப்பின் விதி 27(4) ன் படி வழங்க வேண்டும் என்ற வாதம் ஏற்புடையதா?

9. **<u>வழக்கெழு வினா ஒன்றிற்கான தீர்வு :–</u>**

9.1 மேல்முறையீட்டாளர் 12.2.2013 அன்று புதுகட்டிடம் கட்ட பழைய மின் மீட்டர்கள் உள்ள இடம் தடையாக உள்ளது அதனால் அதை மாற்றி வேறு இடத்தில் வைக்க மின்துறைக்கு மனு கொடுக்க வேண்டும் அதற்கு தகுந்தவாறு விண்ணபத்தை மின்வாரிய அலுவலகத்தில் கேட்டு, எழுதி கொள்வதாக, வீட்டு உரிமையாளர், கேட்டுக் கொண்டதினால் அவரும் மற்ற இரண்டு வாடகைதாரர்களும், எதுவும் எழுதப்படாத தாளில் கையொப்பம் இட்டு கொடுத்தாகவும், அதை உரிமையாளர், மின் இணைப்பை திரும்ப ஒப்படைப்பதாக மனு செய்து, மின் இணைப்பை துண்டித்துவிட்டார் எனவே, அந்த மின் இணைப்பை தங்களுக்கு திரும்பவும் வழங்க வேண்டும் என்று வாதிட்டார்.

9.2 எதிர்மனுதாரர், மின் இணைப்பு எண் 142–023–23 மேல்முறையீட்டாளரால் வேண்டாம் என்று திரும்ப ஒப்படைப்பதாக மனு செய்ததின் காரணமாகத்தான் உரிய கட்டணங்கள் வசூலிக்கப்பட்டு உடனே மின் அளவி கழற்றப்பட்டு விட்டது என்றும் ஆனால் இரண்டு மாதங்கள் கடந்த பின்பு 8–4–2013 அன்று மேல்முறையீட்டாளர், தனக்கு மின் இணைப்பை மீண்டும் வழங்க வேண்டும் என்று மனு செய்துள்ளார் என்றும், அவ்வாறு மின் இணைப்பை வழங்க திருமதி சாரதா அவர்கள் ஆட்சேபனை செய்துள்ளார் என்று வாதிட்டார்.

9.3 மேலும் எதிர்மனுதாரர், மேல்முறையீட்டாளர், தன்னுடைய பெயரிலிருந்த மின் இணைப்பை தானே முன்வந்து மனு அளித்து ஒப்படைத்து விட்டு, அதை திரும்பவும் மறு மின் இணைப்பு வழங்க வேண்டும் என்பது ஏற்புடையது அல்ல என்றும், மின் துண்டிப்பிலுள்ள மின் இணைப்புகளுக்கு மறுமின்னிணைப்பு என்பது மின் கட்டணம் செலுத்தப்படாமல் துண்டிப்பிலுள்ள மின் இணைப்புகளுக்குதான் பொருந்தும் என்றும், மேலும் மின்பாதை (lines feeding the service) அகற்றப்படாமல் இருக்க வேண்டும். நுகர்வோரின் விருப்பத்தின் பேரில்

நிரந்தர துண்டிப்பு செய்யும் மின்நுகர்வோர்களுக்கு அது பொருந்தாது என்றும் வாதுரை புரிந்தார்.

9.4 எதிர்மனுதாரர், மேல்முறையீட்டாளரின் 12–2–2013 நாளிட்ட மனுவிலுள்ள வேண்டுகோளின்படிதான் மின் இணைப்பு நிரந்தரமாக துண்டிப்பு செய்யப்பட்டுள்ளது என்று வாதிட்டுள்ளதால் அந்த மனுவின் சம்பந்தப்பட்ட பகுதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"பொருள் : மின் இணைப்புகள் ஒப்படைப்பு*

*No. (1) 142-23-21 (2) 142-23-23, (3) 142-23-20*

*ஐயா,*

*மேலே கூறியுள்ள மின் இணைப்புகளை நாங்கள் மின் இலாக்காவிற்கு ஒப்படைக்கிறோம், மேலும் நாங்கள் கட்டி உள்ள டெபாசிட்களையும் கணக்குபார்த்து திரும்பி தருமாறு தாழ்மையுடன் கேட்டு கொள்கிறேன்.*

*இப்படிக்கு*
*ஒப்பம் (1) V. சுந்தரராஜன்*
*(2) N. தாமோதரன்*
*(3) R. பலராமமூர்த்தி*

9.5 12–2–2013 நாளிட்ட மனுவை கூர்ந்து படிக்கும் பொழுது நாம் அறிவது திரு. V. சுந்தரராஜன், திரு. N.தாமோதரன் மற்றும் திரு. R.பலராமமூர்த்தி ஆகிய மூன்று பேரும் சேர்ந்து மின் இணைப்பு எண் 142–23–21, 142–23–23 மற்றும் 142–23–20 ஆகிய மின் இணைப்புகளை மின் இலாக்காவிற்கு ஒப்படைப்பதாக தெரிவித்துள்ளார்கள். மேலும், அவர்களுடைய கையொப்பங்கள், Advocate and Notary Public அவர்களால் சான்று(attest) செய்யப்பட்டுள்ளது என்றும் தெரிகிறது. எனவே மின் இணைப்பை மின்வாரியத்திற்கு மேல்முறையீட்டாளர் ஒப்படைத்துள்ளார் என்று தெரிகிறது.

**9.6** மின் இணைப்பை நிரந்தரமாக துண்டிப்பது சம்பந்தமாக, நான் தமிழ்நாடு மின்சார பகிர்மான விகித தொகுப்பின் **33(3)**ஐ ஆராய விரும்புகிறேன். அந்த விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

***"33 AGREEMENTS:***

*(1) All intending consumers shall execute an agreement governing the supply of electricity in the form prescribed at the time of paying the Security Deposit and the service connection charges. The work of extension of supply will be taken up for execution only after the agreement is executed and the Security Deposit and the service connection charges, etc. are paid. For LT consumers other than agricultural and industrial consumers the application is treated as applicationcum-agreement. In case of LT agriculture and industrial services, the agreement shall be in Form 7 in Annexure III and in case of HT consumers, the agreement shall be in Form 8 in Annexure III.*

*(2) Every agreement is for a specific purpose and a specified location. The Engineer may at his/her discretion permit a consumer to change the point of supply from one place to another on such terms as may be prescribed by the Licensee including payment of charges incidental to such change.*

*(3) The agreement can be terminated by the consumer at any time by giving one month's notice in writing to the Licensee expressing his/her intention to do so.*

*(4) The Licensee can terminate the agreement of a consumer at any time by giving one month's notice if the consumer has violated the terms of the agreement or the terms and conditions of this Code or the provisions of any law relating to the agreement including the applicable Acts and Rules under the Act and other orders from time to time. The Licensee shall inform the consumer regarding the grounds for such termination] It is obligatory on the part of the Licensee to inform the consumer regarding the grounds for such termination.*

*(5) In the case of termination of the agreement either by the consumer under sub – regulation (3) or by the licensee under sub – regulation (4), as the case may be, the licensee shall recover the dues if any due from the consumer after making such adjustment of the dues, due to him by the consumer as may be necessary to clear the dues from the consumer against the security deposit or additional security deposit or any other deposit made by the consumer and after making such adjustment, refund the balance deposit, if any, to the consumer within three months from the date of termination of the agreement"*

**9.7** மேற்கண்ட மின்பகிர்மான விதித் தொகுப்பின் விதி **33(3)** ஐ கூர்ந்து படிக்கும் பொழுது நாம் அறிவது ஒரு நுகர்வோர் தன்னுடைய இசைவு பத்திரத்தை முறித்து கொள்ள வேண்டும் எனில் ஒரு மாத அறிவிப்பை உரிமம்தாரருக்கு வழங்க வேண்டும் என்றும் அவ்வாறு அறிவிப்பு தந்து விட்டு நுகர்வோர் இசைவு பத்திரத்தை முடித்து கொள்ளலாம் என்று தெரிகிறது.

**9.8** இந்த வழக்கில் நுகர்வோர், தன்னுடைய மின் இணைப்பை மின்வாரியத்திடம் ஒப்படைத்து விடுகிறேன் என்று கடிதம் கொடுத்துள்ளதால் அவர் தன்னுடைய இசைவு பத்திரத்தை முடித்துக் கொள்கிறேன் என்று தெரிவித்துள்ளார் என்று தெரிகிறது. வாரியமும்,

அதை ஏற்றுக் கொண்டு, **13–2–2013**ல் மின் அளவியை மின் இணைப்பிலிருந்து அகற்றி நிரந்தர மின்துண்டிப்பு செய்துவிட்டது.

**9.9** மேல்முறையீட்டாளர் தன்னுடைய மின் இணைப்பை மீண்டும், மறு இணைப்பு செய்ய வேண்டும் என்று கோரியுள்ளதால் தமிழ்நாடு மின்சார வழங்கல் விதித் தொகுப்பின் விதி **22(6)** கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

***"22. Restoration of supply of electricity***
*xxx xxxx xxx*
*xxx xxxxx xxxx*
*(6) (i) When a service connection remains disconnected for non-payment of electricity charges beyond the notice period of three months, if the consumer comes forward within the period mentioned below to pay the actual dues and agrees to remit the charges in clause (ii) below, the official authorized by the Licensee may grant extension of time beyond the notice period and revoke the termination of agreement provided that the lines feeding the service connection have not been dismantled, so as to facilitate reconnection of the disconnected service*

| ***Category*** | ***Period for reconnection of disconnected service*** |
|---|---|
| *HT consumers* | *Within five years from the date of Disconnection* |
| *LT Agricultural consumers* | *-do -* |
| *Other LT consumers* | *Within two years from the date of Disconnection* |

*(ii) In accordance with sub-regulation (4), the authorized Officer of the Licensee may permit such consumer to pay the outstanding in instalments and to avail reconnection on receipt of 40% of the total arrears outstanding after closing of account due to the licensee, which include –*

*(a) Arrears on the date of disconnection*

*(b) Tariff minimum and meter rent for the period of six months from the date of disconnection (including the notice period)*

*(c) The applicable BPSC / interest upto the date of payment.*

*(d) The balance 60% of the amount shall be collected in ten monthly instalments.*

*(e) In addition to the above, the full amount of Security Deposit adjusted while closing of account shall be collected in one lumpsum before effecting new service connection.*

*Explanation: For the purpose of removal of doubts, it is hereby declared that any tariff minimum collected by the Tamil Nadu Electricity Board prior to the date of publication of the Tamil Nadu Electricity Supply (Amendment) Code, 2006 in the Tamil Nadu Government Gazette, that is to say prior to 21st June 2006 on the basis of sub-regulation (6) as it stood before the said amendment need not be refunded by the Tamil Nadu Electricity Board."*

**9.10** மேற்கண்ட விதி 22(6) ஐ கூர்ந்து படிக்கும் பொழுது மின் கட்டணம் செலுத்தப்படவில்லை என்பதால், மின்துண்டிப்பிலுள்ள மின் இணைப்புகள், அவர்களின் இசைவு பத்திரம் முடித்துக் கொள்ளப்படும் என்ற அறிவிப்பு காலமான மூன்று மாதத்திற்கு பிறகு ஆனால் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டு இரண்டு வருட காலத்திற்குள் ஒரு தாழ்வழுத்த நுகர்வோர் நிலுவைத் தொகையை செலுத்த முன் வருவாரேயானால், அந்த இணைப்பில் மின்பாதை அகற்றப்படாமல் இருந்தால், உரிமம்தாரரால் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலர், கால நீட்டிப்பு வழங்கி, மின் இணைப்பை மீண்டும் இணைக்கலாம் என்று அறிய முடிகிறது. இது மின் கட்டணம் செலுத்தாமல் இருப்பதால், இசைவு பத்திரம் முறித்துக் கொள்ளப்படும் என்று உரிமம்தாரரால் அறிவிக்கப்பட்டுள்ள மின் இணைப்புகளுக்கு பொருந்தும். ஆனால் என் முன்னால் உள்ள இந்த வழக்கில் நுகர்வோர் தன்னுடைய பெயரிலுள்ள மின் இணைப்பை தனக்கு மின் இணைப்பை வேண்டாம் என்று அவராகவே முன் வந்து வாரியத்திடம் ஒப்படைத்துள்ளதாலும், அந்த மின் இணைப்பின் மின்னளவி ஏற்கெனவே அகற்றப்பட்டுவிட்டதாலும் மேற்கண்ட விதி இந்த வழக்கிற்கு பொறுந்தாது என்று நான் கருதுகிறேன்.

**9.11** மேற்கூறிய பத்தியின் தீர்வின்படி மேல்முறையீட்டாளரின் வாதமான துண்டிக்கப்பட்ட மின் இணைப்பை மீண்டும் மறுமின் இணைப்பு வழங்க வேண்டும் என்ற வாதம் ஏற்புடையது அல்ல என்று தீர்வு செய்கிறேன்.

**10. <u>வழக்கெழுவினா இரண்டிற்கான தீர்வு:</u>**

**10.1** மேல்முறையீட்டாளர், தன்னுடைய தந்தையார் காலத்தில் மேற்கண்ட கடையில் வாடகை தாரராக உள்ளதாகவும் மேற்கண்ட இடத்தின் வாடகைதாரர் என்பதால் தமிழ்நாடு

மின்பகிர்மான விதித் தொகுப்பின் விதி 27(4) ன்படி அவருக்கு மின் இணைப்பு வழங்க வேண்டும் என்று வாதிட்டார். மேலும், அந்த விதியில் கூறியுள்ளபடி தான் Indemnity bond சமர்பிக்க தயாராக உள்ளதாகவும் தெரிவித்தார்.

10.2 1956ம் ஆண்டில் அவரின் தந்தை T. ராஜி நாயக்கர் பெயரில்; தற்போதய உரிமையாளர் திருமதி D. சாரதாவின் கொள்ளுபாட்டி திருமதி மங்கத்தாய் அம்மாள் அவர்கள் கொடுத்த வாடகை ரசீதுதான் தன்னிடம் உள்ளது என்றும், அதன்பிறகு யாரும் ரசீது கொடுக்கும் வழக்கத்தை பின்பற்றவில்லை என்றும் வாதிட்டார்.

10.3 வீட்டு உரிமையாளர் திருமதி D. சாரதா மேல் முறையீட்டாளரின் பெயரில் மின் இணைப்பு வழங்க கூடாது என்று நீதிமன்ற தடை உத்தரவு எதுவும் பெறவில்லை என்றும் வாதிட்டுள்ளார்.

10.4 மேலும் உரிமையாளர் நீதிமன்றத்தில் கடையை காலி செய்யச் சொல்லி வழக்கு எதுவும் தொடரவில்லை. இக்கடை ஒன்றே அவரின் குடும்பம் வாழ சோறுபோடுவதால், அதை சட்டவிதிக்கு முரண்பாடாக இடிக்க கூடாது என்று தடை உத்தரவிற்கு மனு செய்து தடை உத்தரவு பெற்றுள்ளார். அந்த வழக்குதான் நிலுவையிலுள்ளது என்றும் தெரிவித்தார்.

10.5 எதிர்மனுதாரர், மனுதாரர், வாடகைதாரர் என்பதற்கு ஆதாரமாக கொடுக்கப்பட்டுள்ள வாடகை ரசீது அவரின் தகப்பனார் திரு. ராஜி நாயக்கர் பெயரிலுள்ளது. மேலும், அது 1956ம் ஆண்டிற்கு உரியது. மேலும், வாடகை ரசீது கதவு எண் 16, வெங்கு பிள்ளை தெரு, எழும்பூர் என்ற இடத்திற்கானது ஆனால் கடை உள்ள இடம் எண்.14, வெங்குபிள்ளை தெரு, எழும்பூர் ஆகும். எனவே, ரசீது உள்ள இடமும், மின் இணைப்பு கோரும் இடமும் வெவ்வேறாக உள்ளது என்றும் வாதிட்டார்.

10.6 மேலும், இடத்தின் உரிமையாளர், மேல்முறையீட்டாளர் பெயரில் மின் இணைப்பு வழங்க ஆட்சேபனை செய்துள்ளார் என்றும், மின்சார பகிர்மான விதித் தொகுப்பின் விதி 27(4) ல் கூறியுள்ள ஆவணங்களை மேல்முறையீட்டாளர் சமர்பிக்கவில்லை என்பதால் அவருக்கு மின் இணைப்பு வழங்க முடியவில்லை என்றும் வாதிட்டார்.

10.7 இந்த வழக்கில் ஒரு இடத்தின் வாடகைதாரர், உரிமைதாரரின் சம்மதமில்லாமல் மின் இணைப்பு வேண்டும் என்று மின்பகிர்மான விதித் தொகுப்பின் விதி 27(4)ஐ சுட்டிக்காட்டி வாதிடுவதாலும், எதிர்மனுதாரரும் அதே விதியை சுட்டிக்காட்டி மின் இணைப்பு வழங்க முடியாது என்று வாதிடுவதாலும், நான் அந்த விதியை ஆராய விரும்புகிறேன். தமிழ்நாடு மின்சார பகிர்மான விதித் தொகுப்பின் அந்த விதி 27(4) கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"27. Requisitions for Supply of Energy:*
*xxx xxxx xxxx*
*xxx xxxx xxxx*
*(4). An intending consumer who is not the owner of the premises shall produce a consent letter in Form 5 of Annexure III to this Code from the owner of the premises for availing the supply. If the owner is not available or refuses to give consent letter, the intending consumer shall produce proof of his being in occupation of the premises and also execute an indemnity bond in Form-6 of Annexure III to this Code indemnifying the licensee against any loss on account of disputes arising out of effecting service connection to the occupant and acceptance to pay security deposit twice the normal rate.*

*Explanation : For the purpose of this sub regulation, the expression 'valid proof' means any proof of occupancy such as registered power of attorney or latest rent receipt issued prior to the date of application or lease deed or possession order from appropriate authority or decree or judgment of Courts."*

10.8 மேற்கண்ட மின் பகிர்மான விதித்தொகுப்பின் விதி 27(4) ஐ கூர்ந்து படிக்கும் பொழுது நாம் அறிவது ஒரு வளாகத்தில் குடியிருப்பவர் என்ற நிலையில் உரிமையாளரின் சம்மதம் இல்லை என்றால் ஒரு மின் இணைப்பை பெற விரும்பும் நுகர்வோர் கீழ்கண்டவைகளை கடைபிடிக்க வேண்டும் என்று தெரிகிறது.

(1) நுகர்வோராக விருப்பமுள்ளவர், அந்த இருப்பிடத்தில் குடியிருப்பதற்கான செல்லத்தக்க சான்று தரவேண்டும் செல்லத்தக்க சான்று என்பது கீழ்கண்டவைகளில் ஏதாவது ஒன்று ஆகும்.

(அ) பதிவு செய்யப்பட்ட அதிகார அளிப்பு ஆவணம்.

(ஆ) மின் இணைப்பு கோரும் விண்ணப்பம் கொடுக்கும் தேதிக்கு முன் அளிக்கப்பட்ட சமீபத்திய வாடகை ரசீது.

(இ) குத்தகை ஒப்பாவணம்

(ஈ) உரிய அதிகார அமைப்பிடமிருந்து பெறப்பட்ட உடமை கட்டளை போன்ற குடியிருப்பு சான்று.

(உ) நீதிமன்ற தீர்ப்புகள் / உத்தரவு

(2) படிவம்– 6ன்படியான காப்புறுதி பத்திரம் (Indemnity Bond)

(3) இயல்பான காப்புறுதி தொகையைப் போல் இரண்டு மடங்கு தொகையை செலுத்த சம்மதக் கடிதம்.

10.9 மேற்கண்ட மூன்று நிபந்தனைகளில்(condition) மேல்முறையீட்டாளர் படிவம் 6ன்படி காப்புறுதி பத்திரம் வழங்க சம்மதம் தெரிவித்துள்ளார், இரண்டுமடங்கு காப்புறுதி தொகையும் கட்ட சம்மதம் என்றும் தெரிவித்துள்ளார். ஆனால், அவர் அந்த இருப்பிடத்தின் குடியிருப்பவர் என்பதற்கு சமர்ப்பித்திருக்கும் வாடகை ரசீதுகள், அவரின் தந்தை திரு. ராஜு நாயக்கர் பெயரில் சூலை, 1958 மற்றும் 1956ம் ஆண்டின் அக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களுக்கு உரியது ஆகும். அந்த வாடகை ரசீதுகள் மேற்கண்ட விதியில் கூறியுள்ளபடி மின்சார விண்ணப்பம் சமர்பித்த நாளிற்கு முன்அளிக்கப்பட்ட சமீபத்திய வாடகை ரசீது அல்ல. மேலும், அவர், மின்சார பகிர்மான விதி 27(4)ல் கூறப்பட்டுள்ள செல்லத்தக்க சான்றுகளில் ஏதேனும் ஒன்றையும் சமர்பிக்கவில்லை. எனவே, மேல்முறையீட்டாளரின் மின் இணைப்பு கோரும் கோரிக்கை, மின்சார பகிர்மான விதித் தொகுப்பின் விதி 27(4)ற்கு இனங்க இல்லை என்பதால், ஏற்புடையது அல்ல என்ற தீர்வு செய்யப்படுகிறது.

11. <u>முடிவுரை:</u>

11.1 வழக்கெழு வினா, ஒன்று மற்றும் இரண்டிற்கான தீர்வுகளின்படி மேல் முறையீட்டாளரின் பெயரில் புதிய மின் இணைப்பு அவரின் பெட்டிக் கடைக்கு வழங்க முடியாது என்பதால் சென்னை மின்பகிர்மான வட்டம் / மையத்தின் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தின் தீர்வில் மாற்றம் எதுவும் செய்யமுடியாது என்று தீர்வு செய்யப்படுகிறது.

11.2 மேற்கண்ட முடிவுடன் மேல்முறையீட்டு மனு எண் 28/2015 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ஆ. தர்மராஜ்)**
மின்குறை தீர்ப்பாளர்

**<u>பெறுநர் :</u>**
திரு. R. பாலராமமூர்த்தி,
ப.எண். 14, புது எண்.31, வெங்குபிள்ளை தெரு,
எழும்பூர்,
சென்னை – 600 08.

2) மேற்பார்வை பொறியாளர்,
சென்னை மின்பகிர்மான வட்டம்/மையம்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
33/11, கே.வி.வள்ளுவர் கோட்டம் துணை மின் நிலையம்,
எம்.ஜி.ஆர் சாலை,
நுங்கம்பாக்கம், சென்னை – 34.

3) தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை,
சென்னை – 600 002.

4) செயலாளர்
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை
எழும்பூர்,
சென்னை – 600 008.

5) உதவி இயக்குநர் (கணினி) – **<u>மின்குறைதீர்ப்பாளரின் இணையதளத்தில் வெளியிடுவதற்காக</u>**
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை,
எழும்பூர்,
சென்னை – 600 008.